A

## அறிவித்தல்

ஒதுக்கீட்டு சட்டமூலம் (2016) பற்றிய குழு நிலை விவாதத்தின் போது சம்பந்தப்பட்ட அமைச்சுகளினால் கௌரவ உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் முன்னேற்ற அறிக்கைகள் சம்பந்தமாக நேற்றைய தினம் சபையில் எழுப்பப்பட்ட விடயம் தொடர்பாக அறிவித்தலொன்றை விடுக்க விரும்புகின்றேன்.

பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கபடும் அவ்வாறான அறிக்கைகளை அச்சிடுவதற்கு ஏற்படும் அதிக செலவினத்தை குறைத்துக்கொள்ளும் ஒரு வழிமுறையாக அச்சிடப்பட்ட அறிக்கைகளுக்கு பதிலாக இருவட்டு (சீடீ) அல்லது எண்ணியல் காணொளி வட்டு (டீவீடீ) வடிவத்தில் அவற்றை வழங்குவதற்கு வழிசமைக்கும் வகையில் 2011 ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தீர்மானத்தின் பிரகாரம், பல்வேறுபட்ட அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நியதிச் சட்ட நிறுவனங்களின் மூலம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக அனுப்பப்படுகின்ற அச்சு அறிக்கைகளுக்குப் பதிலாக சீடி மற்றும் டீவீடீ வட்டுக்களைத் தயாரித்து அனுப்புமாறு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளதோடு வரையறுக்கப்பட்ட அளவிலான அச்சுப் பிரதிகளைப் பெற்றுத்தருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நூலகத்தில் வைக்கப்படுகின்ற மேற்படி அறிக்கைகளின் அச்சுப் பிரதிகள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டுக்காக பாராளுமன்ற சபையின் ஓரிடத்தில் வைக்கப்பட்டு தேவையானவாறு அவற்றை கௌரவ உறுப்பினர்கள் பயன்படுத்துவதற்கு வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கலாம் என்பதை தெரிவிக்க விரும்புகின்றேன்.

அதேவேளை, கௌரவ உறுப்பினர்கள் அத்தகைய அறிக்கைகளை அச்சுவடித்திலேயே பெற்றுக்கொள்ள விரும்பும் பட்சத்தில், அது தொடர்பாக பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் கலந்துரையாடி ஏற்கனவே எட்டப்பட்டுள்ள தீர்மானத்தை திருத்தியமைத்து தேவையான நடவடிக்கைகளை எதிர்வரும் ஆண்டு தொடக்கம் மேற்கொள்ள முடியுமென்பதையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.